# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA


## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 மேயில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கை இரண்டிலும் மேம்படுதல்களை எடுத்துக்காட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2026 மேயில் 56.6 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, 2026 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.** அனைத்து துணைச் சுட்டெண் பெறுமதிகளும் மாதகாலப்பகுதியில் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் பதிவாகி, சுட்டெண் பெறுமதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், மத்திய கிழக்கு மோதலுடன் இணைந்த சவால்மிக்க தொழிற்படுகின்ற சூழல் பற்றி பதிலிறுப்பாளர்கள் தொடர்ந்தும் எடுத்துக்காட்டினர்.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில் அதிகரிப்புக்கள் பிரதானமாக உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள் தயாரிப்பு மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்புத் துறைகளால் தூண்டப்பட்டிருந்தது. உற்பத்தி நடவடிக்கைகளில் அதிகரிப்பிற்கு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேயில் நிலவிய உயர்வான பணி நாட்களின் எண்ணிக்கை பிரதானமாகத் துணையளித்தன. மேலும், கொள்வனவுகளின் இருப்பானது புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அதிகரிப்பிற்கு இசைவாக மாதகாலப்பகுதியில் அதிகரித்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மேயில் நீட்சியடைந்து காணப்பட்டது.

கொ.மு.சு
தயாரிப்பு
2026 மே
**56.6**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | ஏப். | மே. | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **42.6** | **56.6** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| புதிய கட்டளைகள் | 36.4 | 52.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 30.5 | 54.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 47.0 | 59.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 44.0 | 52.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 68.7 | 66.3 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் நடுநிலையான அடிப்படை அளவிற்கு மேல் காணப்பட்ட அதேவேளை, மத்திய கிழக்கு மோதலுடன் இணைந்த இடர்நேர்வுகள் வியாபார எண்ணப்பாங்குகள் மீது தொடர்ந்தும் தாக்கம் செலுத்துகின்றன.

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, சம வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 யூன் 15அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 மேயில் 56.9 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னயை மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.**

பணிகள் துறையில் வியாபார நடவடிக்கை முன்னைய மாதத்தின் வீழ்ச்சியின் பின்னர் 2026 மேயில் மீளத்திரும்பியது. இவ்விரிவடைதல் நிதியியல், தொழில்சார் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளினால் முதன்மையாகத் தூண்டப்பட்டிருந்த அதேவேளை, உண்மைச் சொத்து, தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கம் மற்றும் பொருட்கள் போக்குவரத்து என்பனவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

2026 மேயில் அதிகரித்த புதிய வியாபாரங்களுக்கு நிதியியல் மற்றும் தொழில்சார் பணிகள் துறைகளில் வளர்ச்சி முதன்மையாகத் தூண்டுதலளித்தன. மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட பணிகள் அத்துடன் பொருட்கள் போக்குவரத்துத் துறைகளும் இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன.

ஒப்பந்தங்கள் காலாவதியடைதல்கள், ஓய்வுபெறுதல்கள் மற்றும் பதவிவிலகுதல்கள் காரணமாக 2026 மேயில் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது. அதேவேளை நிலுவையிலுள்ள பணிகள் முன்னைய மாதத்தை விட விரைவான வீதத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.


***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | 2026 ஏப் | 2026 மே | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **46.7** | **56.9** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| புதிய வியாபாரங்கள் | 48.9 | 58.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 44.4 | 49.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.8 | 48.1 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 65.9 | 64.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த காலாண்டிற்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் பெரஹரா பருவகாலத்திற்கான சுற்றுலாப் பயணி வருகைகளில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு மற்றும் மேம்பட்ட பொருளாதார நிலைமைகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு சாதகமாகவிருந்தன. எவ்வாறிருப்பினும், பரந்தளவான உலகளாவிய நிச்சயமின்மைகள் இவ்வெறிவுசெய்யப்பட்ட வளர்ச்சிக்கு தொடர்ந்தும் இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்றன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 மே**
**56.9**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2026 யூன் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.
பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.